Quantum Equipment Co. Ltd.

| | | | |
|---|---|---|---|
| **Publication** | Makkal Kural | **Language** | Tamil |
| **News** | Karatmeter ORA Super  Gold Alloy Analyzer | **Date** | 4th August 2012 |
| **Edition** | Chennai | **Page No.** | 04 |

மக்கள் குரல் 4

4-8-2012

# நகைகளின் தரத்தைக்கண்டறிய புதிய கருவி

சென்னை,ஆக.4-

தங்கம், வெள்ளி, பிளாட்டினம் மற்றும் விலை உயர்ந்த உலோகங்களின் தரத்தை விரைவாக, எளிதாகக் கண்டறிய நவீன சாதனத்தை குவாண்டம் எக்யுப்மெண்ட் நிறுவனம் தயாரித்துள்ளது.

'காரட்டோ மீட்டர் ஓரா' என்ற பெயரில் இந்த தங்க உலோக பரிசோதனை கருவியை இந்தியாவிலேயே முதன்முறையாக அறிமுகம் செய்துள்ளது. இவை சிறிய நகைகள் முதல் பெரிய அலங்கார நகை வரை எளிதாக தர பரிசோதனை செய்ய உதவுகிறது.

குவாண்டம் எக்யுப்மெண்ட் நிறுவனம் உலக தர ஐ.எஸ்.ஓ. தர தேவையை விட துல்லியமாக உள்ளது. ஜெர்மனியின் 'பிருகர் நானோ' நிறுவன கூட்டுடன் இதை குவாண்டம் தயாரிக்கிறது. இந்தியாவிலேயே அதிகபட்ச துல்லிய ஸ்கேனிங் திறமை கொண்டதாக இந்த சாதனங்கள் உள்ளது.

தமிழ் நாட்டில் ஜூவல்லரி வர்த்தகத்துக்கு ஏற்ற 'ஸ்கேனர்' தயாரிப்பில் குவாண்டம் உள்ளது. இந்த 'காரட்டோ மீட்டர் ஓரா' சாதனம் விரைவாக செயல்படக்கூடியது, துல்லியமாகக் காட்டும்திறன் கொண்டது. அபூர்வ உலோகங்களை எளிதாக ஸ்கேன் செய்து தரம் பற்றி உடன் துல்லலியமாகக் காட்டும். இதன் தகவல்களை 'யுஎஸ்பி' சாதனங்களில் இணைத்து ஆன்லைன் மூலம் அனுப்ப முடியும்.

இந்த 'காரட்டோ மீட்டர் ஓரா'வின் 3 ரக சாதனங்களில் 'ஜூவல்' என்னும் சாதனம், நகை ஷோரூம் தங்க நகை கடன் வங்கி போன்றவற்றிற்கு பயன்படும்.

'அசெய்' என்பது தங்க நகை தர ஆய்வு செய்து, ஹால்மார்க் செய்யும் மையங்களுக்கு பயன்படும்.

'சூப்பர்' என்பது அதிக பட்ச திறனுடன், ஸ்கேன் செய்வதுடன் உலோக சுத்திகரிப்பு நிறுவனம், ஆய்வு நிறுவனங்களுக்கு ஏற்றது ஆகும்.

இவற்றிற்கு சர்வீஸ் மையங்களும் உண்டு. இந்த நகை ஸ்கேன் சாதனங்கள் மும்பை பொருட்காட்சி மையத்தில் ஆகஸ்ட் 23 முதல் 27 வரை நடைபெறும் நகை கண்காட்சியில் அரங்கம் 2-ல் உள்ள 9, 11 ஸ்டால்களில் பார்வைக்கு வைக்கப்படும். இது பற்றி அறிய www.karatmeter.com வலைதளத்தைப் பார்க்கலாம்.